# SRI DURGADEVI DEVASTHANAM INC

Inc. in NSW     Registration Number: INC 9878192     ABN: 55768913767
21 – 23 Rose Crescent Regents Park 2143     Tel No. 9644 6682  9746 9724
www.sydneydurga.com

# சைவ சமய அறிவுப் போட்டி

## மத்திய பிரிவு

## (9 வயது முதல் 12 வயது வரை)

## **மாதிரிக்கேள்விகள்**

| | | |
|---|---|---|
| 1 | உங்கள் சமயம் எது? | சைவ சமயம் |
| 2 | சிவபெருமானை முழுமுதற் கடவுளாக வழிபடுபவர்களை எப்படி அழைப்பீர்கள்? | சைவர்கள் என அழைப்போம். |
| 3 | சைவ சமயத்தில் முழுமுதற் கடவுள் என்று கொள்ளப்டுபவர் யார்? | சிவபெருமான் |
| 4 | சிவபெருமான் எப்படிப் பட்டவர் என்று சைவ சமயம் கூறுகிறது? 3 விடயம் கூறுக. | சிவபெருமான் என்றும் உள்ளவர், எங்கும் நிறைந்தவர், எல்லாம் அறிபவர், எல்லாம் வல்லவர், அன்பு வடிவானவர் (எல்லா உயிர்களையும் காப்பவர்) எனச் சைவ சமயம் கூறுகிறது. |
| 5 | சிவபெருமானை வேறு எந்தப் பெயர்களினால் அழைப்பீர்கள்? 5 கூறுக. | அமலன், அரன், அந்திவண்ணன், அங்கணன், அங்கணாளன் அமலன் அமுதவேணி ஆலமுண்டோன் ஆதிநாதன் ஆதிரையான் ஆதிசிவன் இடபக்கொடியோன் ஈசன் ஈசுவரன் உத்தரன் ஐந்துமுகன் முக்கண்ணன் கங்கைவேணியன் கங்காதரன் |
| 6 | சிவபெருமான் தலையை அலங்கரிப்து எவை? | பிறைச் சந்திரன், கங்கை |
| 7 | சிவபெருமானின் கழுத்தை அலங்கரிப்பது எது? | அரவம் - பாம்பு – நாகபாம்பு |
| 8 | சிவராத்திரி எந்த மாதத்தில் வருகிறது? | மாசி மாதத்தில் |
| 9 | "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" - இதைக் கூறியவர் யார்? எங்கே கூறியுள்ளார்? | ஔவையார். கொன்றைவேந்தனில் கூறியுள்ளார். |
| 10 | தந்தை சொல் மிக்க ... இந்த பழமொழியைப் பூர்த்தி செய்க. | தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை. |
| 11 | நாம் கடவுளை வணங்குவதற்குச் செல்லும் இடம் எது? | கோயில் |
| 12 | கோயில் இல்லா ஊரில் ............ என்று தொடங்கும் ஒரு பழமொழி உண்டு. அதைச் சொல்லவும். | கோயில் இல்லாத ஊரில் குடி இருக்க வேண்டாம் என்பது அந்தப் பழமொழி. |
| 13 | ஆலயம் தொழுவது ... என்று தொடங்கும் ஒரு பழமொழி உண்டு. அதைச் சொல்லவும் | ஆலயம் தொழுவது சாலமும் நன்று என்பது அந்தப் பழமொழி. |
| 14 | திருநிற்றை எந்த வேளைகளில் தரிக்கலாம்? | வீபூதியைக் காலையிலும, மாலையிலும் நிராடிய பின்பும், உணவருந்துவதற்கு முன்னும் நித்திரைக்கு முன்னும் பின்னும் தரித்தல் சிறந்தது. |
| 15 | ஔவையார் அருளிய நீதி நூலகள் எவை? | ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி |
| 16 | ஒரு ஊரை அழகு செய்வது எது? | கோயில் |
| 17 | கோயில் வாசலை அலங்கரிப்பது எது? | கோயில் கோபுரம் |
| 18 | கோயிழல அடைந்ததும் எதைப் பார்த்து முதலில் கும்பிட வேண்டும்? | கோயில் கோபுரத்தைப் பார்த்து முதலில் கும்பிட வேண்டும். |

| | | |
|---|---|---|
| 19 | மாணவர்களிடம் இருக்க வேண்டிய நல்ல குணங்கள் 4 கூறவும். | கடவுளைத் தினமும் வழிபடல், எப்பொழுதும் உண்மை பேசுதல், ஒருவரின் உடலுக்கோ மனதிற்கோ துன்பம் விளைவிக்காதிருத்தல், எல்லா உயிர்களிடத்திலும் அன்பு செலுத்துதல், பெரியோரைக் கனம் பண்ணுதல், பெற்றோர் – ஆசிரியர்களின் சொற்படி கேட்டல். |
| 20 | பிள்ளையாரை எப்படிக் கும்பிட வேண்டும்? | கைவிரல்களை மடக்கி நெற்றியிலே மூன்றுமுறை குட்டித் தோப்புக்கரணம் போட்டுக் கும்பிடவேண்டும். |
| 21 | சிவபருமானின் இடப்பக்கத்தில் இருக்கும் தெய்வத்தின் பெயரைக் கூறுக. | உமாதேவியார் |
| 22 | பிள்ளையாருக்கு வேறு இரண்டு பெயர்களைக் கூறவும் | கணபதி, விநாயகர், ஐங்கரன் ஆனைமுகன் ஏகதந்தன் கரிமுகன் ஆகிசன் மதகரி ஆகுவாகனன் |
| 23 | கயமுகாசுரனை வதம் செய்த கடவுளின் பெயரைக கூறவும். | விநாயகப் பெருமான் |
| 24 | படைத்தல் தொழிலைச் செய்யும் கடவுளின் பெயரைக் கூறவும். | பிரம்மா |
| 25 | பிரம்மாவிற்கு வேறு பெயர்கள் 2 கூறுக. | நான்முகன், பங்கயன், மலரோன் |
| 26 | திருமாலுக்கு வேறு பெயர் 4 கூறுக. | கோவிந்தன், வெங்கடேசுவரர் (வெங்கடேஸ்வரர்), முகுந்தன், முரளீதரன், மதுசூதனன், கடல்வண்ணன், மாதவன், உலகளந்தோன், நாராயணன், கேசவன், சிறீரங்கநாதன், உலகமுண்டோன் |
| 27 | முருகப் பெருமானின் கொடியில் உள்ள பறவை எது? | சேவல் |
| 28 | முருகப் பெருமானுக்கு உகந்த விரத நாள்கள் எவை? | கந்தசட்டி (கந்தசஷ்டி), திருக்கார்ததிகை விரத நாள்கள் ஆகும். |
| 29 | முருகக் கடவுளுக்கு வேறு பெயர்கள் 5 கூறுக. | ஆறுமுகன் சேந்தன் சரவணபவன் கார்திகேயன் சுப்பிரமணியன் மயில்வாகனன் கந்தன் செவ்வேள் வடிவேலன் கடம்பன் அயிலவன் மதங்கன் கலையறிபுலவன் வேலாயுதன் |
| 30 | அம்மை அப்பனை அதாவது சிவபெருமானையும் உமாதேவியாரையும் சுற்றி வந்து மாம்பழத்தைப் பெற்றுக் கொண்ட கடவுள் யார்? | பிள்ளையார் |
| 31 | திருஞானசம்பந்தமூர்ததி நாயனாருக்கு ஞானப்பால் ஊட்டிய தெய்வத்தின் பெயரைக் கூறுக. | ஊமை அம்மை |
| 32 | திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் பிறந்த ஊர் எது? | தமிழ் நாட்டில் உள்ள சீர்காழி |
| 33 | தேவாரம் பாடிய மூன்று நாயனார்களின் பெயர்களையும் கூறுக. | திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்<br>திருநாவுக்கரசு நாயனார்<br>சுந்தரமூர்த்தி நாயனார் |
| 34 | திருநீறு எதில் இருந்து செய்யப்படுகிறது? | பசுவின் சாணததிலிருந்து செய்யப்படுகிறது. |
| 35 | நவராத்திரி என்பது எதைக் குறிக்கின்றது? | ஒன்பது இரவுகளைக் குறிக்கின்றது |
| 36 | நவராத்திரி காலத்தில் கடைசி மூன்று நாள்களில் எந்த சததிக்கு விசேட பூசை நடைபெறும். | சரசுவதி தேவிக்கு விசேட பூசை நடைபெறும். |
| 37 | கோயிலில் நடைபெறும் இரு விழாக்களின் பெயர்களைக் கூறுக. | தேர்த் திருவிழா, தீர்த்தத் திருவிழா ..... |
| 38 | சகலகலாவல்லி மாலையைப் பாடியவர் யார்? | குமரகுருபர சுவாமிகள் |

| | | |
|---|---|---|
| 39 | திருமுறைகளைத் தொகுத்துத் தந்தவர் யார்? | நம்பியாண்டார் நம்பி |
| 40 | திருக்கேதீச்சரத்தில் வீற்றிருக்கும் சிவபெருமானுக்குப் பதிகம் பாடியருளிய நாயனார் யார்? | சுந்தரமூர்த்தி நாயனார் |
| 41 | சிவபெருமானை நினைந்து விசேடமாகச் சைவர்களால் கொண்டாடப்படும் இரண்டு தினங்கள் கூறுக. | சிவராத்திரி, ஆருத்திரா தரிசனம். |
| 42 | சிவபுராணத்தின் முதல் வரியைக் கூறுக. | நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க |
| 43 | சிவபுராணத்தை அருளிய நாயனார் யார்? அது எத்தனையாம் திருமுறை? | சிவபுராணத்தை அருளியவர் மாணிக்கவாசக சுவாமிகள். இது 8ஆம் திருமுறை. |
| 44 | முருகக் கடவுளுக்குரிய விசேட தினம் 2 கூறுக. | திருக்கார்த்திகை, தைப்பூசம், வைகாரி விசாகம் |
| 45 | முருகக் கடவுளின் கதையைக் கூறும் புராணம் எது? | கந்தபுராணம் |
| 46 | கந்தபுராணத்தை அருளியவர் யார்? | கச்சியப்ப முனிவர் |
| 47 | மாசி மகத்தின் சிறப்பு யாது? | துர்க்கை அம்மனுக்கு விசேட தீர்த்தம் - பூசை செய்யப்படும் தினம் |
| 48 | உத்தராயணம் என்றால் என்ன பொருள்? | சூரியன் வடக்கு நோக்கிச் செல்லும் காலம் உத்தராயணம் என்று கூறப்படும். |
| 49 | ஓதுவார் என்று சொல்லப்படுவர்கள் யார்? | தேவாரங்களைப் பண் இசையுடன் கோயில்களில் இசைப்பவர். |
| 50 | விரதத்தில் சிறந்த விரதம் எது? | பிற உயிர்களைக் கொல்லாமையே சிறந்த விரதம் ஆகும். |